# ★ வாழைச்சேனையில் பார்சல் குண்டு வெடிப்பு


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 24 இதழ் 242
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 10 — 10 — 1992


## ஒருவர் பலி; 8பேர் படுகாயம்

(கொழும்பு)

வாழைச்சேனை மக்கள் வங்கி கட்டிடத்திற்கு எதிரேயுள்ள தேநீர்கடை ஒன்றில் நேற்றுக் காலை 'பார்சல் குண்டு' ஒன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். 8 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தோர் உடனடி (4-ம் பக்கம் பார்க்க)

## "பிரபாகரனை நாமும் தான் தேடுகிறோம்" - பிரேமதாஸா

(புதுடில்லி)

"விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே பிரபாகரனை, நாம் எல்லோருமே தற்போது தேடி வருகின்றோம்" இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா அண்மையில் புதுடில்லியில் பத்திரிகையாளர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசா மேலும் பதிலளிக்கையில், திரு. பிரபாகரனை இந்தியாவிடம் கையளிக்கும் விடயம் சட்டத்துறைக (4ம் பக்கம் பார்க்க)

# புனர்வாழ்வு வழங்கப்பட்ட இளைஞர்க்கு எதிராக வழக்குத்தாக்கல் இல்லை

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு எதிராக இனிமேல் பயங்கரவாத குற்றச்சாட்டின் பேரில் வழக்குத்தொடர்வதில்லையென்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா தெரிவித்தார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட இளைஞர்கள், மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுவதை தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 8423 இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் 2 ஆயிரம் இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளது என்று புனர்வாழ்வு ஆணையாளர் மேலும் கூறினார். (வி)

## 12 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர்

(கொழும்பு)

இவ்வருடம் நியமிக்கப்பட இருக்கும் 15 ஆயிரம் ஆசிரியர்களில் இதுவரை 12ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கல்விச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எஞ்சிய 3ஆயிரம் ஆசிரியர்களும் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் நியமிக்கப்பட இருப்பதாகவும் இவர்களுடன் மேலும் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களையும் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற் (4ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகளுக்கு சீனாவிலிருந்து துணி இறக்குமதி

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைகளை வழங்குவதற்காக சீனாவிலிருந்து பெருந்தொகையான பொலியெஸ்டர் துணி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சுமார் 40 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்குவதற்காக 9 கோடியே 1 லட்சத்து 63ஆயிரத்து 331யார் வெள்ளை பொலியஸ்டர் துணி தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள் (4ம் பக்கம் பார்க்க)

## முன்னாள் பிரதமர் வி. பி. சிங் கைது

(லக்னோ)

இந்திய முன்னாள் பிரதமர் வி. பி. சிங் நேற்று உத்தர பிரதேசத்தில் ரங்கோலா என்னும் கிராமத்தில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

உத்தரபிரதேச மாநிலத்தின் விவசாயிகளுக்கு எதிரான அரசின் கொள்கைகளை எதிர்த்த விவசாயிகள் 4 பேர் (4-ம் பக்கம் பார்க்க)

## அக்டோபர் 26-ல் பௌதீகவியல் II பரீட்சை

(கொழும்பு)

கல்வித் திணைக்களத்தினால் ரத்துச் செய்யப்பட்ட க. பொ. த. (உயர்தரம்) பௌதீகவியல் II பரீட்சை எதிர்வரும் 26ம் திகதி நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

முன்னர் நடைபெற்ற பரீ (4ம் பக்கம் பார்க்க)

# கொலைகளை செய்த ஐவருக்கு புலிகள் மரணதண்டனை தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

திட்டமிட்ட கொலை, பாலியல் வன்முறையுடனான கொலை ஆகியவற்றில் ஈடுபட்டதாக உறுதிப்படுத்திய ஐந்து பேருக்கு விடுதலைப் புலிகள் மரண தண்டனை தீர்ப்பு வழங்கியுள்ளார்கள் என்று விடுதலைப் புலிகள் பிரமுகரான திரு. பொன்தீகோ தெரிவித்துள்ளார்.

நேற்று கோண்டாவில் அரசியல் நிர்வாகப் பிரிவில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த (4ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று மாலைதீவு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா 'சார்க்' நாடுகளுக்கான விஜயத்தின் கடைசி கட்டமாக இன்று சனிக்கிழமை மாலைதீவுக்கு விஜயத்தை மேற்கொள்கின்றார்.

4-ம் பக்கம் பார்க்க)

## நவம்பர் முதல் கிராமசேவை அலுவலர் சீருடை அணிய பணிப்பு

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு பகுதியில் பணிபுரியும் கிராம சேவை அலுவலர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் சீருடை அணிந்து பணிபுரியுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சீருடைத் துணிகள் அண்மையில் மாவட்ட செயலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்பட்டன.

பொதுமக்கள் இலகுவில் இவர்களை அடையாளம் காண்பதற்காகவே சீருடைகளை அணிந்து பணிபுரியுமாறு (4ம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களைப் பாவிப்போருடன் அரசு பேசாது - பிரட்மன்

(கொழும்பு)

"ஆயுதங்களை கைவிட்டவர்களுடன் மாத்திரமே இனப்பிரச்னை தீர்வு குறித்து அரசு பேச்சுக்களை நடத்தும்" என ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரச்னை தீர்வுக்காக யார் ஆயுதங்களை பாவிக்கிறார்களோ அவர்களுடன் அரசு (4-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் திகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இம்மாதம் பின்வரும் திகதிகளில் தமிழீழ மீட்புநிதி சேகரிக்கப்படுமென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

நல்லூர்-14ம் திகதி, யாழ்ப்பாணம்-15ம் திகதி, கோப்பாய் 16ம்திகதி, உடுவில் சண்டிலிப்பாய் 17ம் திகதி சங்கானை, காரைநகர் 18ம்திகதி, (4ம் பக்கம் பார்க்க)

## தீப்பெட்டி எடுத்துவர பயணிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

வடபகுதிக்கு தீப்பெட்டி எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு படையினர் சலுகை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தாண்டிக்குளம் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் ஒவ்வொருவரும் தலா ஒரு டசினுக்கு மேற்படாமல் தீப்பெட்டிகளை எடுத்துச்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (சி)

நிலம் அரித்து நீர்மூடும் - மூடாது
நலம் அறிந்து மரம் நடுமிடத்து

# வரி விளம்பரம்

## வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி–6848)

## அறிவுக்களஞ்சியம்

உயர்கல்வி மாணவருக்கும் பாடசாலைக்கல்வி மட்டும் போதாது. பரந்துபட்ட பொது அறிவும் மிக அவசியம். பொது அறிவை வளர்க்கும் நோக்குடையது 'அறிவுக்களஞ்சியம்' நாலாவது இதழ் விற்பனையாகிறது. ரூபா 10 உங்கள் விற்பனையாளரிடம் கேளுங்கள். எ–2488

## ஆண்டு 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரித் தேர்வு 11-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும் மாதிரி வினாத்தாள்களையும், அண்மையில் வெளியிட்ட மாதிரிப் பயிற்சியையும் (விடைகளுடன்) பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலா வீதி, யாழ்ப்பாணம். (சி–6876)

## குறைந்த சலார்<br>குறித்த நேரம்<br>தரன் ஸ்ருடியோ

தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92 — 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலை கட்டு, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி–6878)

## தவறிவிட்டது

க. இராசதுரை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம ஊழியர் மானிப்பாய், மருதடி என்ற விலாசதாரருடைய அடையாள அட்டை, சங்க அடையாள அட்டை மணிபேர்சுடன் ரொக்கப் பணமும் மானிப்பாய் நகர சபை மண்டபத்திற்கு முன்பாகத் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும. (சி–6877)

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலயியம, சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள்; மூத்திரரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். (சி–6855)

## ஆண்டு 5 புலமைப்பரிசில்

ஆண்டு 4ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு (புலமைப் பரிசில் 1993) மாதிரிப்பரீட்சை 11-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். அண்மையில் எமது நிறுவனத்தால் வெளியிடப்பட்ட துரித மீட்டற் பயிற்சியையும், மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி–6875)

## சித்திராலயா இடமாற்றம்

இதுவரை காலமும் சோமில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த எமது நிறுவனம் 5-10-92 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியிலுள்ள பழைய இடத்தில் இயங்குகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். (சி–6863)

## மரக்கன்றுகள்

மரக்கன்றுகள் அன்பளிப்பாக வழங்குகிறோம். இச் செயற்திட்டத்திற்கு அவசியமான வெற்றுப் பால்மா பக்கற்றுகள் / மற்றும் மில்க்வைற் மேலுறைகள் மாற்றுக் தந்து மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளவும். உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள். மில்க்வைற். (எ–2493)

இன்று

## விஞ்ஞான பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் விஞ்ஞானக்கழகம் நடாத்தும் விஞ்ஞானப் பொருட்காட்சி இன்று 10ம் திகதி கல்லூரியில் நடைபெறும்.

காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை ஆண்டு 6 தொடக்கம் உயர்தர வகுப்பு (ஆண்டு 13 வரை) மாணவிகள் இப்பொருட்காட்சியில் பங்குபற்றுகின்றார்கள.

## திருட்டு

(மானிப்பாய்)

நவாலியில் ஒரே வீட்டில் இரு லேடீஸ் சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

நவாலி தெற்கைச் சேர்ந்த சத்தியபாமா என்பவர் கடந்த 4-ம் திகதி இரவு தமது இரு சைக்கிள்களையும் பூட்டி வீட்டையும் பூட்டிக்கொண்டு கலை விழாவிற்குச் சென்றிருந்த சமயம் மதிலால் ஏறி உள்ளே குதித்துச் சென்ற திருடர்கள் அங்கே விடப்பட்டிருந்த சுமார் 10,000 ரூபா பெறுமதியான இரு சைக்கிள்களையும் திருடிச் சென்றுள்ளனர். (71)

## இராசி பலன்

**10-10-1992**<br>**சனிக்கிழமை**<br>**(தமிழுக்கு புரட்டாதி 24)**

சதுர்த்தசி மு. இ. 10-41 வரை. பூரட்டாதி காலை 6-38 வரை: இராகு காலம் காலை 9-02 முதல் 10-34 வரை. சுபநேரம் மாலை 3-02 முதல் 4-32 வரை. மரணயோகம், நடேசரபிஷேகம்.

மேஷம்: வீண் கலவரம், பணவிரயம், பெரியோர் பகை.

இடபம்: அதிகசுகம், சுபகாரிய முயற்சி, மகிழ்ச்சி.

மிதுனம்: தாய் நினைவு, விருந்துண்ணல். பாராட்டு.

கடகம்: அதிகாரிகள்சினம், வீண் அலைச்சல், மனப்பயம்.

சிங்கம்: பிறர் தொல்லை, நியாய போராட்டம், அவமதிப்பு.

கன்னி: ஆடம்பர செலவு, அதிக பிரயாசம், மனவேதனை.

துலாம்: கடிதஉறவு, பெண் உதவி, சயனசுகம்.

விருச்சிகம்: காரிய கடினம், பணமுடை, தொழில் பீதி.

தனுசு: மனச்சஞ்சலம், அதிகாரதொல்லை, காரியத்தடை.

மகரம்: தொழில் சிறப்பு, புதிய முயற்சி, குடும்பசுகம்.

கும்பம்: காரிய அலைச்சல், நண்பர் விரோதம், வெறுப்பு.

மீனம்: தொழில் லாபம், சமாதான முயற்சி, பிறர் பாராட்டு.

— ஜோஸ்யர்

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின் வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1992 நவம்பர் 20ம் திகதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள்

1. நுண்கலையில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) – (நாடகமும் அரங்குக் கலைகளிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து).
2. ஆங்கில இலக்கியத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

சம்பள அளவுத் திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I: ரூபா 9,600—8X250—11,600/— (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8,000—5X250/—9,250— (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/ மாதமொன்று (நிலையானது) ஆண்டு ஒன்றுக்கு (தகுதிகாண்)

(துறைத் தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4,500/- 10X200—6,500— (மாதமொன்றுக்கு சம்பள அளவுத்திட்டத்தில் வைக்கமுடியும்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல்வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23X10 சத மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்,<br>யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,<br>திருநெல்வேலி,<br>யாழ்ப்பாணம்.<br>1992–10–07 (எ–2496)

## மாவீரர் நாளையொட்டி மாணவர்களிடையே பாட்டு, பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளையொட்டி பாடசாலை மாணவர் மட்டத்தில் பாட்டு, பேச்சு போட்டிகளை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு நடத்தவுள்ளது. மாவீரர் நாளுக்கான இப்போட்டிகள் சிறப்புற பாடசாலை கொத்தணி அதிபர்களின் ஒத்துழைப்பை மாணவர் அமைப்பு கோரியுள்ளது

போட்டிகள்விபரம் வருமாறு:

01. அ. பேச்சுப் போட்டி, ஆ. பாட்டுப்போட்டி.

02. பேச்சுப் போட்டி (பாட்டுப் போட்டிப்பிரிவுகள்) அ. பாலர் பிரிவு – ஆண்டு 1, 2, ஆ. அதிகீழ்ப் பிரிவு – ஆண்டு 3, 4, 5. இ. கீழ்ப் பிரிவு – ஆண்டு 6, 7, ஈ. கனிஷ்ட பிரிவு – ஆண்டு 8, 9 உ. மேற்பிரிவு –10, 11, 11மீட்டல் வகுப்பு, ஊ அதிமேற் பிரிவு – ஆண்டு 12, 13, 13 மீட்டல் வகுப்பு

மேலே குறிப்பிட்டவாறு போட்டிகள் பாடசாலை மட்டத்தில் 6 பிரிவுகளாக நடாத்தப்படும்

03 போட்டிக்கான விடயங்கள் அ குறித்த பாடசாலையின் மாவீரர் பற்றி, ஆ. பாடசாலைச் சுற்றுடலில் மாவீரர் பற்றி. மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களில் மாணவர் போட்டிகளில் பங்குபற்றலாம்.

04. பாட்டுப் போட்டி எல்லாப் பிரிவுகளுக்கும். விடயம்: தமிழீழ புரட்சிப் பாடல். (ஒரு புரட்சிப் பாடல் மட்டும் ஆகக் கூடியது 10 நிமிடம்)

## வல்லிபுர ஆழ்வார் கோயில் இன்று தேர்த் திருவிழா

(பருத்தித்துறை)

இலங்கையில் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத் தேர்த் திருவிழா, இன்று 10ம் திகதி நடைபெறுகின்றது. இன்றைய தினம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையும் இடம்பெறும் காலை 10-30 மணிக்கு அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ், 'பணிந்தேத்துமாறறிபேன' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார். பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி. 'பாண்டவர் சகாயன்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

11ம் திகதி வல்லிபுர ஆழ்வாரின் கடல் தீர்த்தத் திருவிழா நடைபெறும். அன்று மாலை 6-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் அ. சண்முகதாஸ், 'பக்தியிலே ஆழ்ந்த ஆழ்வார்கள்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புரை ஆற்றுவார் இரவு 8-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு எஸ். சிவலிங்கராசா, 'நாச்சியார் சூடிய மாலை' என்னும் பொருள் பற்றியும், அதனை அடுத்து அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ், 'குகன் என்னும் ஒருவன்' என்னும் பொருள் பற்றியும் உரையாற்றுவார்கள்.

12ம் திகதி கேணித் தீர்த்தத் திருவிழா நடைபெறும். அன்றைய தினமும் அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ ஜெயராஜின் சிறப்புரை இடம் பெறும். மறுநாளான 13ம் திகதி, அனுமார் மடையும் இடம்பெறுமென மேற்படி ஆலயத் தர்மகர்த்தாச் சபை அறிவித்துள்ளது. (52)

## 31-ம் நாள்<br>நினைவஞ்சலியும்<br>சபிண்டீகரண<br>ஆத்மசாந்தி அழைப்பும்



**திருமதி**<br>**சிதம்பரப்பிள்ளை செல்லம்மா**

| மண்ணில்: | விண்ணில்: |
| --- | --- |
| 1931-05-07 | 1992-9-11 |

எமது குலவிளக்கு திருமதி சிதம்பரப்பிள்ளை செல்லம்மா அவர்களின் சபிண்டீகரணம் 11-10-1992 ஞாயிற்றுக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும். இவ் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,<br>பேரப்பிள்ளைகள்.

அல்வாய் கிழக்கு,<br>அல்வாய். (சி–6880)

## ★ சவளக்கடையில் கொல்லப்பட்ட தமிழர்களின்

# நூற்றுக்கும் மேற்பட்ட எலும்புக் கூடுகள்

# உரம் செய்வதற்கு எடுத்துச் செல்லப்பட்டன

(மட்டக்களப்பு)

சம்மாந்துறைத் தொகுதியிலுள்ள சவளக்கடைப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டு அரை குறையாக எரிந்த நிலையில் காணப்பட்ட சுமார் நூறு தமிழர்களின் எலும்புக் கூடுகளைக் கடந்த வாரம் அப்பகுதிக்குச் சென்ற பெரும்பான்மைச் சமூகத்தவர் உரம் செய்வதற்காக எடுத்துச் சென்றுள்ளதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

படுகொலை செய்யப்பட்டு அரை குறையாக எரிக்கப்பட்ட தமிழர்களின் மேலும் பல எலும்புக்கூடுகள் இப்பகுதியில் இருக்கலாமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியிலுள்ள சகல வீடுகளும் உடைக்கப்பட்டு அவைகளிலிருந்த பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இவ்வீடுகளுக்குள்ளேயே நூற்றுக்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் சில மாதங்களாகக் கிடந்தது தெரியவருகிறது.

இதேவேளை இப்பகுதியில் உள்ள 'நாலாம் கிராமம்' மக்கள் சஞ்சாரமற்ற ஒரு சூனியப் பிரதேசமாகவே காணப்படுகிறது. இங்கு பாடசாலைகளும், எட்டு இந்துஆலயங்களும் 600க்கும் மேற்பட்ட வீடுகளும் உடைக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இங்கு வாழ்ந்த 600 குடும்பங்களும் கடந்த இரு வருடங்களாக அகதி முகாம்களிலேயே தங்கியுள்ளன. பொதுவாகப் பல கிராமங்களில் வீடுகள் அனைத்தும் சூறையாடப்பட்டதுடன் தொடர்ந்தும் வீட்டுச் சுவர்கள் இடிக்கப்பட்டும், பயன்தரு மரங்கள் வெட்டப்பட்டும் வருகின்றன.

அடிக்கடி கிராமங்களுக்குச் செல்லும் சீருடை, சிவிலுடை தரித்த ஆயுதபாணிகள் ஆங்காங்கே தங்கியிருக்கும் மக்களுக்குப் பெரும் தொல்லை கொடுத்து வருகிறார்களாம். தமிழ் மக்களை அவர்களது சொந்தக் கிராமத்திலிருந்து துரத்தியடிப்பதே இவர்களின் நோக்கமாம்.

இப்பகுதிகளை அடிக்கடி சுற்றி வளைக்கும் படையினர் பல பொதுமக்களை கைது செய்கிறார்கள். அவ்விதம் முகாம் கொண்டு செல்லப்பட்ட பலர் திரும்பிவரவே இல்லையாம்.

இவ்வாறு கிழக்கில் சூனியப் பிரதேசங்களாகிவிட்ட தமிழ் கிராமங்களில் சிங்களக் குடியேற்றமுயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தமிழக தலைவர்கள் அனைவரும்

# நாலாந்தர அரசியல்வாதிகள்

(சென்னை)

தமிழக அரசியல் வாதிகளை நாலாந்தர அரசியல்வாதிகள் என 'கல்கி' சஞ்சிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஜெயலலிதா, கருணாநிதி வாழப்பாடி, மூப்பனார், சுப்ரமணிய சுவாமி போன்றோரை நாலாந்தர ஆபாச அரசியல் வாதிகள் என இச் சஞ்சிகை கூறியுள்ளது.

இப்படியான நாலாந்தர அரசியல் வாதிகளின் கையில் தமிழ் நாடு இக்கிமூச்சு முட்டி திண்டாடுகிறது.

இவர்களிடமிருந்து தமிழகத்தைக்காப்பாற்றுவது யார். தமிழர்களின் தலையெழுத்து இதுதானா எனவும் கல்கி கேள்வி எழுப்பியுள்ளது.

இதேவேளை 'சாவி, பத்திரிகையும் இதேகருத்துப்பட கேலிச்சித்திரம் ஒன்றை வரைந்துள்ளது. வேறு சில பத்திரிகைகளும் இவர்களது அரசியல்கோமாளித்தனத்தை கண்டித்துள்ளன. (159)

## ஜெனரல் வைத்தியா கொலை

# இரு எதிரிகளும் நேற்று தூக்கிலிடப்பட்டனர்

[புதுடில்லி]

முன்னாள் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வைத்தியாவைக் கொலை செய்த இரு சீக்கியர்களும் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை புனேயிலுள்ள இரவாடா மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.

கொலையாளிகளான ஹரிஜிந்தர் சிங் ஜிந்தா, சுரிதேவ் சுங் சுக்கா ஆகிய இருவரினதும் மரணதண்டனையை நிறுத்துமாறு கோரி 5 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டபோதும் அவற்றை சுப்ரீம் கோட் தள்ளுபடி செய்துவிட்டது.

1984 இல் பஞ்சாப்பிலுள்ள பொற்கோயிலினுள் நுழைந்த இந்திய இராணுவம் சீக்கியத் தீவிரவாதிகளின் தலைவரான பிந்தரன் வாலேயை கொலை செய்த 'ஒபரேஷன் புளூ ஸ்டார்' ஜெனரல் வைத்தியாவே பொறுப்பேற்றுச் செய்ததாகக் கூறி சீக்கிய தீவிரவாதிகள் இவருக்கு மரண தண்டனை விதித்து இவரைச் சுட்டுக் கொன்றதும் தெரிந்ததே. (சி)

## தொழில் திணைக்கள உத்தியோகத்தர் நியமனம

(பண்டத்தரிப்பு)

தொழில் திணைக்கள நடவடிக்கைகளை பொதுமக்கள் சுலபமாக செய்து கொள்வதற்காக நிர்வாகப்பரவலாக்கல் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாயிலுள்ள வலி-தென் மேற்கு பிரதேச செயலர் பணிமனையில் தொழில் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்

ஒவ்வொரு மாதத்திலும் வரும் 2 வது வெள்ளிக்கிழமைகளில் இந்த உத்தியோகத்தரை இப்பிரிவு மக்கள் இங்கு சந்தித்து தங்கள் பிரச்சனைகள் பற்றி தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

# செய்திச்சுருக்கம்

### இடம்பெயர்வு

(வட்டுக்கோட்டை)

மாதகல், இளவாலை, அளவெட்டிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வந்து சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சமடைந்திருந்த கடற்றொழிலாளர், விவசாயிகளின் குடும்பங்கள் வேலைவாய்ப்புத் தேடிக் கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்றுள்ளன. (159)

### மாதாந்த உதவிப் பணம்

(மானிப்பாய்)

சில்லாலை தெற்கு சில்லாலை வடக்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெற்று வருபவர்களுக்கான மே, யூன் மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் மானிப்பாயில் வைத்து வழங்கப்பட்டது. (71)

### தீப்பெட்டி தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் தீப்பெட்டிகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. அதிக விலை கொடுத்தாலும் இப்பகுதியிலுள்ள கடைகளில் தீப்பெட்டி கிடைப்பது மிகவும் கஷ்டமாகவிருக்கின்றது. (72)

### சிற்பக் கண்காட்சி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் எதிர்வரும் 14ம் திகதி நடைபெறவிருக்கும் ஓவிய சிற்பக் கண்காட்சியில் பண்டத்தரிப்புக் கோட்டப் பாடசாலைகள், காட்சிப் பொருள்களை எதிர்வரும் 12ம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கும்படி கோரப்பட்டுள்ளது. (154-139)

### செஞ்சிலுவைச் சங்க கொடி வாரம்

(திருநெல்வேலி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவினரின் கொடி வாரம் கடந்த 7ம் திகதி ஆரம்பமாகி 15ம் திகதி வரை நடைபெறவுள்ளதாக மேற்படி சங்கத்தின் தலைவர் திரு.ச செல்லத்துரை தெரிவித்துள்ளார். (157)

### வித்தியாலயம் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோ. க. வித்தியாலயம் ராணுவ நடவடிக்கைகாரணமாக தற்போது மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ. க. வித்தியாலயத்தில் இயங்கி வருகின்றது. (72)

### பயிற்சிநெறி கொடுப்பனவு

(நல்லூர்)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் மாநகரசபை பணியாளர்களின் பயிற்சிநெறிக்காக 90,000 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பகுதிக் கொடுப்பனவாக 50,000 ரூபா யாழ் மாநகரசபைக்கு அண்மையில் கிடைத்துள்ளது. (157)

### பாரதி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பாரதி இளைஞர் அறிவியற்கழகத்தின் பாரதிவிழா கழகத்தலைவர் ம. இ. லோஷன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்குயாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சி வேலாயுதமும்சிறப்பு விருந்தினராகயாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி க. செ. கார்த்திக்கும் கலந்து கொண்டனர். (அ)

### உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(தாளையடி)

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மாவீரர் ஞாபகார்த்தமாக நடாத்திய பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வடமராட்சி கிழக்கிலுள்ள 10 கழகங்கள் பங்கு பற்றின.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தாளையடி சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம், ஆழியவளை சக்திவேல் விளையாட்டுக் கழகத்தை 4:2 என்ற கோல் அடிப்படையில் வென்று மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. (163)

# வட்டியில் சலுகை கொடுக்க இலங்கை வங்கி முன்வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"இலங்கை வங்கி சர்வதேச ரீதியில் தனது நிலையை உயர்த்துவதற்காகச் சில நிர்வாக மாற்றங்களைக் கொண்டுவருகின்றது. எனவே தரகுப் பணம், சேவைக் கட்டணம் அறவிடுகிறது என்று கருதிக் கொள்ளலாகாது. காரணம், சகஜநிலை வரும்போது நீங்கள் வங்கியிலிருந்து சகல நன்மைகளையும் பெறக்கூடியதாக இருக்கும். தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக வங்கி மேலதிகப் பற்று, கடன் போன்ற வசதிகளைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது."

-வங்கி முகாமையாளர்

இவ்வாறு இலங்கை வங்கியின் யாழ். மேல்தரக் கிளையின் பிரதான முகாமையாளர் திருமதி க துரைராஜா கூறினார். மேற்படிகிளையைசேர்ந்த திரு. இ. சுதாகரின் இறை வணக்கத்துடன் ஆரம்பமான வங்கியின் வாணி விழாவில் பிரதான முகாமையாளர் தொடர்ந்து பேசுகையில்:

"கடன், மேலதிகப் பற்று, மீளப் பெறுதல் சம்பந்தமாக வங்கி தற்போது ஒவ்வொருவருடைய நிலைமைக்கேற்ப, வட்டியில் சலுகை கொடுக்க முன்வந்துள்ளது. இந்தச் சலுகைகளைப் பாவிப்பதன் மூலம் ஒருவர் இலகுவாகக் கடனை மீளக்கூடியதாக இருக்கும் மேலும் நீங்கள் ஒரு நாணயமான வாடிக்கையாளர் என்ற பெயரை நிலைநாட்டுவதன் மூலம், சகஜநிலை வரும்போது மேலும் கடன் வசதிகளைப் பெறக்கூடிய நிலையை உருவாக்கிக் கொள்ளலாம்.

"1944ம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதி இலங்கை வங்கியின் 5வது கிளையாக யாழ்ப்பாணக் கிளை ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 48 வருடச் சேவையைப் பூர்த்தி செய்துள்ளது. பழமையும், பெருமையும் மிக்க இவ்வங்கியானது பொதுச் சேவை நோக்கம் கொண்ட மிகவும் நம்பிக்கைக் குரிய, செழித்து வளர்ந்த ஒரு பிரமாண்டமான அரசாங்க வங்கி" என்று கூறினார். (இ)

## அலைகடற் கருகினிலே வளருகின்றான்! மாயன்!!

ராகம்; தேஷ் — தாளம்: ஆதி

**பல்லவி**

வல்லிபுரத்தாழ்வாரை நிதம்பாடு — உன்தன்
வல்வினைத் துயரெல்லாம் உடனோடும் — மனமே
(... வல் ......)

**அனுபல்லவி**

அலைகடற் கருகினிலே வளருகின்றான் — உயர்
கலையொளிர் கோவிலினிலே வளருகின்றான் — அந்த
(... வல் ......)

**சரணம்**

அன்பர்கள் வடம்தொட்டு இழுப்பதைப்பார் — உயர்
அன்பென்னும் ரதத்தமர்ந்து வருவதைப்பார் — மெய்
அன்பர்கள் மகிழ்ந்தாடும் கூத்தினைப்பார் — தேடும்
அன்பர்கள் அருளுண்டு திளைப்பதைப் பார் — என்றும்
(... வல் ......)

★

தேரினில் திருமகளின் அழகினைப்பார் — கோலத்
தேரினில் பூமகளின் எழிலதனைப்பார் — மாயன்
தேரினில் வருகின்ற அழகினைப் பார் — ஐயன்
தேனிதழ் பொழிகின்ற புன்னகைபார் — மனமே!
(... வல் ......)

"முருகு"

(இன்று வல்லிபுர ஆழ்வார் கோவில் ரதோற்சவம்.)

## புலிகளின் நடமாட்டத்தை தடுக்க
# தமிழக அரசுக்கு ரூ. 30 கோடி

(சென்னை)

"தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களை முற்றாகத் தடை செய்வதற்காக மத்திய அரசு 30 கோடி ரூபாவை தமிழ்நாடு அரசுக்கு வழங்கியுள்ளது"

இவ்வாறு இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தற்போது அனேகமாக முற்றாகத் தடை செய்யப்பட்டுவிட்டது. இதற்காக மத்திய அரசு தமிழ்நாடு அரசுக்கு இதுவரை 30 கோடி ரூபா வழங்கியுள்ளதுடன் மிக அதிநவீன ஆயுதங்களையும் வழங்கியுள்ளது என்றார்.

பாட்டாளி மக்கள் கட்சி தடைசெய்யப்படுமா எனக் கேட்ட கேள்விக்கு இதுவிடயமாக அரசு தீவிர விசாரணை செய்து வருகிறது. விசாரணைகள் முடிவடையுமுன்பு நான் பதிலளிப்பது சரியல்ல என்று திரு. சவான் பதிலளித்துள்ளார். (வி)

## இராணுவ நடவடிக்கையால் நெற்செய்கை பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

சில்லாலை தும்பளப்பாய் வயல்வெளியில் தங்கள் காணிகளில் காலபோக நெல் விதைப்பதற்காக உழுவதற்கு மாடுகளுடன் சென்றவர்கள் மீது நேற்றுமுன்தினம் மாதகல் நுணசைப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

இதனால் தங்கள் நெல் விதைப்பை கைவிட்டு இவர்கள் தெய்வாதீனமாக காயமெதுவும் இன்றி தப்பி வந்துள்ளதாக அறியப்படுகின்றது. இப்பகுதியில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் இம்முறை காலபோக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாது திண்டாடுகின்றனர். (72)

## முன்னாள் மே. ஜேர்மன் அதிபர் காலமானார்

[பேர்லின்]

முன்னாள் மேற்கு ஜேர்மன் அதிபர் விலி பிராண்ட் தனது 78-வது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார்.

1971இல் இவர் நோபல் பரிசு பெற்றவர் என்பதும், ஐரோப்பிய நாடுகளின் கிழக்கு மேற்கு பதற்ற நிலையை நீக்குவதில் பெரும் பங்காற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பேரவைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தமிழீழக் கல்விக் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளதால் தவறாது சகல பேரவைப் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும்படி பேரவைச் செயலாளர் கேட்டுள்ளார்.

## மதுபான அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

உல்லாச பிரயாண ஹோட்டல்களில் மதுபான வகைகளை விற்பதற்கு புதிய அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் அரசாங்கம் தற்போது கட்டுப்பாடுகளை கொண்டுவந்துள்ளது.

உல்லாசப் பிரயாண சபையின் அனுமதியுடன் நிர்மாணிக்கப்பட்ட 50 அறைகளுக்கு அதிகமான ஹோட்டல்களுக்கு மாத்திரமே மதுபான வகைகளை விற்பதற்கான அனுமதிப் பத்திரங்கள் இனிமேல் வழங்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது. (வி)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் புனித நீக்கலஸ் கழகத்தை எதிர்த்து சென். தோமஸ் கழகமும் 2-வது ஆட்டத்தில் சென். மேரிஸ் கழகமும் சென். அன்ரனிஸ் கழகமும் மோதும். (வி)

## நினைவு முத்திரை

(கொழும்பு)

முன்னாள் மக்கள் கட்சித் தலைவரான காலஞ்சென்ற விஜயகுமரணதுங்காவின் 47 வது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று ஒரு ரூபா முத்திரை வெளியிடப்பட்டது.

நாராகேன்பிட்டி பொல்கேன்கொடயில் விஜயகுமாரணதுங்க நிறுவனத்தில் இந்த வைபவம் இடம்பெற்றது.

தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் ஏ. எம். எஸ் அதிகாரி உட்பட பல பிரமுகர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். (கே)

**நவம்பர் முதல்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமான அறிவித்தலொன்று வடக்குகிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சினால் சகல மாவட்டச் செயலகங்களுக்கும் பிரதேச செயலர் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

## ஜெனரல் வைத்தியா கொலை:
# எதிரிகள் தூக்கிலிடப்பட்டதற்கு
## முன்னாள் ராணுவ அதிகாரி கவலை

(புதுடில்லி)

முன்னாள் ராணுவ தளதி வைத்தியாவைக் கொலை செய்தோரை நேற்று தூக்கிலிட்டது குறித்து முன்னாள் ராணுவ அதிகாரியும் சீக்கியருமான ஜக்ஜித்சிங் அரோரா கவலை தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

1984ல் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டபோது சுமார் 3 ஆயிரம் அப்பாவி சீக்கியர்கள் கண்ட கண்ட இடங்களில் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு விசாரணை நடத்தப்படவில்லை. அல்லது யாரும் தண்டிக்கப்படவுமில்லை.

ஆனால் ராணுவத் தளபதி ஒருவரை கொலைசெய்வதற்காக மாத்திரம் நடவடிக்கை எடுத்து நேற்று இருவர் தூக்கிலிடப்பட்டனர்.

நீதி என்பது எல்லோருக்கும் பொதுவானதொன்றல்ல என்பதை இதன் மூலம் நிரூபித்துவிட்டனர் என கவலைவெளியிட்டார். இதேவேளையில் இந்த மரணதண்டனை தொடர்பாக 3 நாள் ஹர்த்தால் ஒன்றை பஞ்சாபில் நடத்த முன்வருமாறு சீக்கியருக்கு அங்குள்ள அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. [கே]

**வாழைச்சேனை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களின் நிலை குறித்து எதுவித தகவலும் இதுவரையில் கிடைக்கவில்லை.

மேலும் குண்டுவெடிப்பினால் ஒரு தேநீர்கடை பலத்த சேதமடைந்துள்ளதாகவும் ஆயினும் சேதவிபரம் குறித்து உடனடியான தகவல் எதுவும் பெற முடியவில்லையெனவும் கூட்டுப்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து துரித விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் ஆயினும் இதுவரையில் பயனுள்ள தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையென்றும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. (க)

## பரிசுநாள் விழா

[உடுவில்]

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை பரிசு நாள் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் அதிபர் இ. வல்லிபுரம் தலைமையில் நடைபெறும்.

வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் அ. துரைராசா ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (109)

**தமிழீழ மீட்புநிதி**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தெல்லிப்பழை 19ம் திகதி, தீவகம் 20ம் திகதி பருத்தித்துறை, கரவெட்டி 24ம்திகதி, சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி 31ம் திகதி.

மேற்படி உதவி அரச அதிபர் பிரிவுகளில் நிதிசேகரிக்கும் இடமும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் நிதித்துறை தெரிவித்துள்ளது. [வி]

**முன்னாள்**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டதை கண்டித்து அந்த கிராமத்திற்கு திரு. வி. பி. சிங் சென்றபோதே அவர் கைது செய்யப்பட்டார்.

திரு. வி. பி. சிங் அமைதியை குலைக்கிறார் என பொலிசார் குற்றஞ்சாட்டியுள்ளனர். (கே)

**கொலைகளை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவது; தர்மக்கேணி, பளையைச் சேர்ந்த ஆசிரியையான 24 வயதான தர்சனா குமாரசாமியை 5-6-91ல் பகல் 1-30 மணியளவில் திட்டமிட்டு நல்லையா நவரத்தினராசா (நவம் 31 வயது), குலசேகரம் மகேந்திரராசா (34 வயது), செல்லையா சுந்தரம்பிள்ளை (வயது 40), சண்முகம் மாப்பாணி (வயது 42) ஆகியோர் கொலை செய்தனர்.

நல்லையா நவரத்தினராஜா (நவம்) இவர் மினிபஸ் உரிமையாளர் என்றும் புகைப்படப்பிடிப்பாளர் என்றும் தர்மக்கேணி பளையை வசிப்பிடமாகக் கொண்டவர் என்றும்-

குலசேகரம் மகேந்திராசா (வயது 34) விவசாயத்தை தொழிலாகக் கொண்டவர். இவரின் வசிப்பிடமும் தர்மக்கேணி பளை என்றும்-

செல்லையா சுந்தரம்பிள்ளை (வயது 40) இவர் தர்மக்கேணி பளையைச் சேர்ந்தவரென்றும் இவரின் தொழில் கமம் என்றும்-

சண்முகம் மாப்பாணி (வயது 42) விவசாயத்தை தொழிலாகக் கொண்டவர். கெற்பலி மிருசுவிலைச் சேர்ந்தவர்.

நல்லையா நவரத்தினராசா (நவம்) கொலைசெய்யப்பட்ட ஆசிரியையான தர்சனா குமாரசாமியை ஒருதலைப்பட்சமாக விரும்பியிருந்தார். எனினும் அவர் அதற்கு மறுப்புத்தெரிவித்ததினால் பழிவாங்கல் காரணமாக தர்சனாவைக் கொலைசெய்வதில் திட்டம் வகுத்தார். இவரோடு ஏனைய மூன்றுபேரும் சேர்ந்து இக்கொலையைச் செய்தனர்.

பிறிதொரு சம்பவமான சரசாலை வடக்கு சாவகச்சேரியில் கந்தசாமி சசிகலா (வயது 11) என்ற சிறுமியை பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய பின்பு வாய்க்குள் மண் திணித்து கழுத்து நெரித்து கொலைசெய்தார் என்ற குற்றச்சாட்டின பேரில் ரசிகரன் (வயது-17) என்பவருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இச்சிறுமி எரு பொறுக்கச் சென்றபோது அவரை ஏமாற்றி 30-6-92ல் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி கொலை செய்தார். [சு]

**12 ஆயிரம்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (வி)

**அக்டோபர்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்சை மண்டபங்களிலேயே இந்தப் பரீட்சையும் நடைபெறும் என பரீட்சைத்திணைக்களம் மேலும் அறிவித்தது. (இ)

**பாடசாலை**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

மாணவர்களின் சீருடைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி துணிகளை அளவுப்பிரமாணமாக வெட்டுவதற்கு 'ரெண்டர்' கோரப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (வி)

**பிரபாகரனை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் சம்பந்தப்பட்டது. ஆதலால் நடைமுறை விதிகள் படிப்படியாகதான் பின்பற்றப்படும் என்று கூறினார்.

எனினும் இந்தியாவில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா சுற்றுப்பயணம் செய்தபோது திரு. பிரபாகரனைப் பற்றி நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில் அளிக்கப்படவில்லையென்று நிருபர்கள் கூறியுள்ளார்கள். (வி)

**ஜனாதிபதி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பிரேமதாசா பதவியேற்றபின் மாலைதீவுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

இதேவேளையில் சட்ட விரோதமாக மாலைதீவு கடற்பிரதேசத்தில் மீன்பிடித்து கைது செய்யப்பட்டு காவலில் இருந்த 6 இலங்கை மீனவர்களையும், அந்நாட்டு அரசு இருநாட்டு நல்லெண்ணத்தை குறிக்கும்முகமாக விடுதலை செய்துள்ளது.

மாலைதீவில் 3700 இலங்கையர்கள் பல்வேறு துறைகளில் தொழில் புரிந்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கே)

**ஆயுதங்களைப்**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேசமாட்டாது வன்முறைகள் மூலம் பிரச்னைக்குத் தீர்வு காண முயல்பவர்களுடனும் அரசு பேசாது.

சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகளுடன் பேசி தீர்வு காணவேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்றார்.

பிரச்னை தீர்வு குறித்து அரசு புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துமா என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். (சி)


## தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடங்கள்

| | |
|---|---|
| தகமைகள்: | 8 ம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. (உயர்தரம்) வரை |
| உயரம்: | 5' 6" |
| வயது: | 18 — 30 வரை |

மேற்கூறிய தகமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேராக சமுகந்தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்,
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(ஏ-2495)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336/81.